# 8 வீட்டிலுள்ள வளங்களைப் பயனுள்ளவாறு பயன்படுத்துவர்


## 8.1 மனைச் செயற்பாடுகளின்போது பயன்படுத்தப்படும் பல்வேறு வளங்களை இனங்காண்பர்

மனை என்பது குடும்ப அங்கத்தவர்கள் யாவரும் வசதிகளுடனும் மகிழ்ச்சியுடனும் தமது தேவைகளை நிறைவு செய்து வாழும் இடமாகும். ஒருவர் தான் எதிர்பார்க்கும் திருப்தியை மனையிலிருந்து பெறவேண்டுமாயின் அதற்கு மனையாளின் செயற்றிறன், வள முகாமைத்துவத்தின் வெற்றிகரமான அமைப்பும் காரணமாகும்.

செயற்றிறன் உள்ள முகாமைத்துவத்திற்கு


- வீட்டிலுள்ள வளங்களை இனங்காணுதல்
- வளங்களைச் சரியான முறையில் திட்டமிட்டு ஒழுங்குபடுத்துதல்
- அவற்றைச் சரியான முறையில் நிர்வகித்தலில் திறமை இருத்தல் அவசியமானதாகும்.

குடும்ப அங்கத்தவர்களின் தேவைகள் சரியான முறையில் நிறைவு செய்யப்படுவதால் குடும்ப அங்கத்தவர்களுக்குத் திருப்தி ஏற்படும். அத்துடன் இல்லத்தரசியும் மனத்திருப்தி அடைவாள். இதன் அடிப்படையில் வீட்டிலுள்ள வளங்களை இனங்கண்டு அவற்றைப் பற்றிக்கற்போம்.





அட்டவணை 8.1 மனை வள வகைப்படுத்தல்

வீட்டு வளக் குறிப்பையும் உரு 8.1 ஐயும் நன்றாக அவதானித்து உங்கள் மனை வளங்ளை இனங்காண முயற்சி செய்க. வீட்டில் உள்ள வளங்களில் நீங்கள் இனங்காண்பதில் முதற் கட்டம் மனித வளங்களை இனங்காண்பதாகும்.




உரு 8.2 மனித வளங்கள்

சமூகத்திற்கு நன்மையைப் பெற்றுத் தருவதற்காக மனித வளங்களான அறிவு, திறன், மனப்பாங்கு, உழைப்பு என்ற வளங்கள் திட்டமிட்டுப் பயன்படுத்தப்பட வேண்டும்.




உரு 8.2 மனித வளங்களை பயன்படுத்தல்

தனதும் தனது குடும்ப அங்கத்தவர்களினதும் இயலுமைகளை சரிவர இனம்காண மனையாளின் அறிவு மிக அவசியம்.

மனப்பாங்கு என்பது ஒவ்வொரு மனிதனதும் கலாசாரமுறை, கல்வி மட்டம் மற்றும் நடத்தைகளின் மூலம் உருவாகும் உறுதிப்பாடாகும் என்பவற்றைக் குறிப்பிடலாம். ஒருவரிடம் காணப்படும் அறிவு திறன் என்பவற்றால் பயன்பெற அவரில் சிறந்த மனப்பாங்கை வளர்த்தல் அவசியமாகும்.

**அறிவு**

- குடும்பத்தினருக்கு உணவளித்தல்
- மலிவுகாலங்களில் கிடைக்கும் உணவுப் பொருள்களை பதனிட்டுப் பாதுகாத்தல்
- சிக்கனமாகப் பொருட்களை வாங்குதல்
- வீட்டு வேலைகளைச் செயல்திறன் உடையதாக நடைமுறைப்படுத்தல்
- குடும்ப அங்கத்தவர்களிடையே காணப்படும் பல்வேறு துறைகள் பற்றிய அறிவைப் பயன்படுத்திக் கொள்ளல்
- பணம் ஏனைய வீட்டு வளங்கள் என்பவற்றின் மூலம் உச்ச பயனைப்பெறுதல்
- பொருட்களை விலைகொடுத்து வாங்கும் போது அவற்றுக்கான பிரதியீட்டுப் பொருட்களையும் தெரிவு செய்தல்

**செயற்பாடு - 1**

உங்கள் வகுப்பறையையும் பாடசாலையையும் பேணிப் பாதுகாப்பது மாணவர்களான உங்களிடம் காணப்படும் சிறந்த மனப்பாங்காகும். இந்த மனப்பாங்கை வெளிக்காட்டும் வகையில் உங்கள் மனைப் பொருளியல் ஆய்கூட வளங்களை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விளக்கும் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க.

### திறன்கள்

ஒரு மனையாள் தனது வேலைகளைத் திறம்படச் செய்யத் தேவையான திறன்கள் பல உள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| உடற் திறன் | - | சிறந்த உடலாரோக்கியம் பெற்றிருத்தல் |
| உளத் திறன் | - | சரியான முடிவுகளை எடுக்கவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் வழிகாட்டல் |
| முகாமைத்துவத் திறன் | - | வீட்டு நிர்வாகத்தின் வழிகாட்டி என்ற வகையில் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழிகாட்டல் |
| தொழிற் திறன் | - | வீட்டுத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் வீட்டு வேலைகளுக்குத் தேவையான பொருள்கள் உபகரணங்களை இயன்றளவு சுயமாக உற்பத்தி செய்யவும் தெரிந்திருத்தல். |

### உடற் திறன்

தனது தேகாரோக்கியத்தையும் குடும்ப அங்கத்தவர்களின் தேகாரோக்கியத்தையும் பேணுதல்.

## உளத்திறன்

வீட்டு நிருவாகச் செயற்பாடுகள், திட்டமிடல் ஒழுங்கமைப்புக் கட்டுப்பாடும், மதிப்பிடலும் மனையாள் எடுக்கும் தீர்மானங்களில் தங்கியுள்ளன. இதற்கு, அவள் சிறந்த உளத்திறன் படைத்தவளாக இருத்தல் வேண்டும்.

## வழிகாட்டல் முகாமைத்துவத் திறன்கள்

நிர்வாகம் / வழிகாட்டல்திறன் இல்லத்தரசி தனது வேலைகளை உரியவாறு ஒழுங்குபடுத்தி உரிய நேரத்தில் செய்து முடிப்பதன் மூலம் பிறருக்கு முன்னுதாரணமாக விளங்கி வழிகாட்ட முடியும்.

## தொழிற் திறன்

குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவது மட்டுமன்றி தேவைக்கேற்ப வீட்டுக்காரியங்கள் ஈடுபடுத்திக் கொள்வதில் உளத்திருப்தி எனும் வளத்தையும் பெறுவாள். இது விலை மதிப்பிட முடியாத வளமாகும். அது மனத்திருப்தியையும் பெற்றுத்தரும்.

## உழைப்பு

வீட்டு வேலைகளைச் செய்வதில் ஒவ்வொரு குடும்ப அங்கத்தவரினதும் சக்திகள் பல்வேறுபட்டவையாக இருக்கும். இவ்வேறுபாடுகள் அவர்களின் உடல், உள நிலைகளுக்கேற்ப வேறுபடும்.

வீட்டு வேலைகளை இலகுவான வேலைகள், சாதாரண வேலைகள், கடினமான வேலைகள் என வகைப்படுத்தலாம். இவற்றுள் எத்தகைய வேலைகளைச் செய்தாலும் நாம் தேவையற்ற விதத்தில் களைப்படையாது இருத்தலில் கவனம் செலுத்துதல் வேண்டும்.


அவ்வாறு உழைப்பில் ஈடுபடும்போது களைப்படையாமல் இருப்பதற்கு,

- வேலைகளை விருப்பத்துடன் செய்ய வேண்டும்.
- கடினமான வேலைகளைச் செய்யும்போது வானொலி கேட்டல் போன்றவற்றில் ஈடுபட்ட வண்ணம் அவற்றைச் செய்யலாம்.
- கடினமான வேலைகளை சிறு பகுதிகளாக பிரித்து மேற்கொள்ளல்.
- வேலைகளைப் பிறருடன் பங்கிட்டுச் செய்யலாம் (வேலைப் பகிர்வு)
- கடினமான விருப்பமில்லாத செயல்களை முதலில் செய்தல்.
- நேரத்தையும் உழைப்பையும் வீணடிக்காத உபகரணங்களைப் பயன்படுத்தல்.

## கணிப்பீட்டு வினாக்கள்

1. வீட்டு வளங்களைப் பயனுள்ளவாறு பயன்படுத்தும்போது 13 வயது நிரம்பிய மகள் ஒருவரின் தொழில் திறன்பற்றிய ஓர் உதாரணத்தைக் காட்டி அதனை எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்தி குடும்ப முன்னேற்றத்துக்கு வழிவகுக்கலாம் என்பது பற்றி விளக்குக.
2. உங்கள் இரு அயலவர்களுடன் கலந்துரையாடி அவர்கள் எவ்வாறு மனித வளங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பது பற்றித் தெரிந்துகொள்க. குறைகள் காணப்படின் அவற்றை எவ்வாறு தீர்த்துக்கொள்ள முடியும் என்பது பற்றிய ஆலோசனைகளை முன்வைக்குக.
3. குடும்ப அங்கத்தவர்களின் உழைப்பைப் பயன்படுத்துதல் பற்றிய திட்டம் ஒன்று இருப்பதனால் ஏற்படும் பயன்கள் யாவை?

**மனை வளங்களில் மனித வளங்கள் தொடர்பான அறிவு பெற்றிருப்பீர்கள். இப்போது மனிதனல்லாத வளங்கள் தொடர்பாக ஆராய்வோம். மனிதனல்லாத வளங்களை இனங்காண பின்வரும் உருவில் அவதானம் செலுத்துங்கள்.**





உரு 8.3 மனிதன் அல்லாத வளங்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

- ஒரு வீட்டு வருமானமாக பணம் மட்டும் அமைவதில்லை.
- வருமானம் பொருள்களாகவும் சேவையாகவும் கிடைக்கின்றன.
- எமக்குக் கிடைக்கும் வருமானத்தின் மூலம் சிறந்த பயனைப் பெறுவதும் நாம் பெறும் வருமானமாகும்.

மனை வளங்களுள் பௌதிக வளங்கள் என்னும் பிரிவில் பணரீதியான வருமானம் முக்கிய இடம் வகிக்கின்றது.


குடும்பத்துக்குக் கிடைக்கும் இவ்வடிப்படை வளத்தை உரிய முறையில் பயன்படுத்துதல் வேண்டும். இசைவாக்கமடையாத அதிகமான விலங்குகள் அழிந்துள்ளன. அதே போன்று பொருளாதார வளம் இல்லாத மனிதனும் அழிவுக்குள்ளாவான் என்ற கூற்றை நீங்கள் கவனத்தில் எடுங்கள். அதனால், பொருளாதார ரீதியில் பலம் பெற்றிருத்தலும் அதனை அபிவிருத்தி செய்துகொள்ளலும் மிக முக்கியமானதாகும். இங்கு பொருளாதார அபிவிருத்திக்கான முக்கிய அடிப்படை குடும்பத்தின் பொருளாதாரத்தைத் திட்டமிடுவதாகும். பௌதிகவளம் : பணம்




உரு 8.3 குடும்பவருமான வகையீட்டு அட்டவணை

### குடும்பத்தின் பண வருமானம்

குடும்ப அங்கத்தவர்கள் தமது உழைப்புக்கான கூலியாக சம்பளம் பெறுகின்றனர். அதே போன்று வங்கியில் வைப்புச் செய்துள்ள பணத்திற்குக் கிடைக்கும் வட்டி, பங்குச் சந்தையில் பங்குகளை வாங்கி விற்பதனால் கிடைக்கும் இலாபம், வெகுமதிகள், வாடகை போன்ற அனைத்தும் ஒரு குடும்பத்துக்கு பண வடிவில் கிடைக்கும் வருமானமாகும்.




### பொருள்கள்

வீட்டுக்குக் கிடைக்கும் மற்றொரு வருமான வழி பொருள் வருமானமாகும். பொருள் என்பதன் கீழ் நுகர்வுப் பொருள்களாக குடும்ப அங்கத்தவர்களின் நுகர்வுக்காகப் பயன்படுத்தலாம். பொருள்களும் (உணவுப் பொருள்கள், வேறு அழியும் பொருட்கள்) நிரந்தரப் பொருள்களாக பல்வேறு உற்பத்திச் செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் (மண்வெட்டி, தையல் இயந்திரம்) பொருள்களைக் குறிப்பிடலாம். மூலதனப் பொருள்கள் நீண்ட காலம் பொருளாதாரத்தில் நிலைத்திருந்து புத்தாக்கங்களை உருவாக்கக்கூடியது.

### சேவைகள்

சேவைகளாக பணம் கொடுத்து பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் (போக்குவரத்து, நீர், மின்சாரம் போன்றன) நிதி சார்ந்ததும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதுமான சுகாதார சேவைகள், இலவசக் கல்வி, புலமைப் பரிசில்கள், நூலக வசதிகள், பூங்காக்கள், பொலிஸ் பாதுகாப்பு போன்ற நலன்புரிகள் போன்வற்றைக் குறிப்பிடலாம்.

**உளவருமானம் அங்கத்தவர்களின் மேற்குறித்த வருமான நுகர்வின் மூலம் பெறும் உளப்பூரிப்பு நிலை திருப்தி எனப்படும்.**

### சொத்துக்கள்

ஒரு குடும்பத்துக்குச் சொந்தமான நிலம், பெறுமதியான வளங்களில் கட்டடங்கள் முதலியனவும் கருதப்படும். இச்சொத்துக்கள் மூலம் உச்சபயனைப் பெற்றுக்கொள்ளத்தக்கவாறு அவற்றை அபிவிருத்தி செய்தல், அவற்றை விற்று வருமானம் பெறல், பொருத்தமான பயிர்களை வளர்த்தல் ஆகியவற்றின் மூலம்.

### நீர்

சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டிய காற்றுக்கு அடுத்தபடியாக வாழ்க்கைக்குத் அத்தியாவசியமான வளமாகவும் தேசிய வளமாகவும் நீர் உள்ளது. ஒவ்வொரு வேலைக்கும் தேவைப்படும் அளவு நீரையே பயன்படுத்த வேண்டும். முடியுமானவரை ஒரு தேவைக்காகப் பயன்படுத்திய நீரை இன்னொரு தேவைக்கும் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். வீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட வழிந்தோடும் நீரைப் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தலாம். பணம் செலவாகும் என்பதற்காக மட்டுமன்றி நீர் ஒரு தேசிய வளம் என்னும் மனப்பாங்கை விருத்தி செய்யவும் அதனைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

### இடவசதிகள்

வீட்டு வேலைகளைச் செய்வதற்கு இடவசதி அவசியமாகும். இடவசதி இருப்பின் வேலைகளை எளிதாகவும் ஒழுங்காகவும் செய்து முடிக்கலாம். தனி அறைகள் வீட்டில் இல்லாவிட்டாலும் தேவைக்கு ஏற்ப ஒரு அறையையே பிரித்து பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்த முடியும்.

### பொது வசதிகள்

விளையாட்டு மைதானம், பூங்கா, வைத்தியசாலைகள், விற்பனை நிலையங்கள், நூல் நிலையம், பொலிஸ் பாதுகாப்பு போன்றவை மக்கள் அனைவருக்கும் பொதுவான வசதிகளாகும்.

## பௌதிகமல்லாத வளங்கள்

### நேரம்

நேரம் என்பது பௌதிக வளமல்லாத வளங்களில் முக்கியமானதாகும். எல்லோருக்கும் சம அளவில் கிடைக்கும் வளம் இதுவாகும். இதனை ஒரு நாளில் 24 மணித்தியாலங்களாகவே அனைவரும் பெறுகின்றனர். அதனை யாரும் கூட்டிக் குறைக்க முடியாது. நேரத்தை திட்டமிட்ட அடிப்படையில் பயன்படுத்துவதன் மூலம் வாழ்க்கையில் முன்னேற முடியும். அதிக மகிழ்ச்சியைப் பெறமுடியும். சிலவேலைகளை ஒரே நேரத்தில் செய்து முடிக்கலாம். உதாரணமாக: சலவை இயந்திரத்தில் துணிகளை இட்டுக் கழுவும் அதே நேரத்தில் சமையல் வேலைகளையும் செய்ய முடியும். மனையில் மனித வளத்தைப் பயன்படுத்தி வீட்டு வேலைகளைச் செய்வதற்கோர் வேலைத்திட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக பயனைப் பெறலாம்.

### மின்சாரம்

பௌதிகமல்லாத வளமான மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துதல் குடும்பத்தின் பொறுப்பாகும்.

### பொழிப்பு

- வீட்டு வேலைகளுக்காகப் பயன்படுத்தக்கூடிய பிரதான வளங்களாக மனித வளம். மனிதன் அல்லாத வளமும் காணப்படுகின்றன.
- வீட்டிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி உச்சப்பயனைப் பெறும் ஆற்றலும் அறிவும் இல்லத்தரசியிடம் காணப்படுதல் வேண்டும்.
- ஒரு குடும்பத்துக்கு பண வருமானத்திற்கு மேலதிகமாக மெய் வருமானம் உள வருமானம் என்பவற்றைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துதல் குடும்பத்திற்கு முக்கியமானது.
- மனிதனல்லாத வளங்களான நிதி, சொத்துக்கள், நீர், இடவசதிகள், சமூக வசதிகள், நேரம் மற்றும் மின்சாரம் முதலியவற்றையும் வீட்டிலுள்ளோரின் நலனுக்காகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

### கணிப்பீட்டு வினாக்கள்

1. மனை வளங்களை வகைப்படுத்திக் காட்டுக.
2. ஓர் இல்லத்தரசியிடம் இருக்க வேண்டிய திறன்கள் ஐந்தினை எழுதுக.
3. ''மெய் வருமானம்'' என்பதனை விளக்குக.
4. உங்கள் வீட்டுக்குக் கிடைக்கும் சமூக, சேவை, வசதிகள் பற்றி விளக்குக.
5. மனை முகாமைத்துவச் செயற்பாட்டில் நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதன் அவசியம் பற்றி விளக்குக.